# ரூஹின் சிறகுகள்



கப்பல் பதிப்பகம்

முஜாமலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூஹின்
# சிறகுகள்

முஜாமலா

கப்பல் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூஹின் சிறகுகள் * ஆசிரியர்: முஜாமலா© * கவிதைகள்*
முதல் பதிப்பு: டிசம்பர் 2023 * பக்கங்கள்: 90 *
கடல் பதிப்பகம், மதுரை * தொலைபேசி: 8680844408 *
மின்னஞ்சல்: kadalpathippagam@gmail.com *
அட்டை வடிவமைப்பு: கே.எம்.கார்த்திகேயன் *
புத்தக வடிவமைப்பு: சந்தோஷ் கொளஞ்சி *

விற்பனை உரிமை:
பனுவல் புத்தக நிலையம்
112, முதல் தளம்,
திருவள்ளுவர் சாலை,
காமராஜ் நகர், திருவான்மியூர்,
சென்னை – 600041
கைப்பேசி: 97890 09666

விலை ரூ. 160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலையும்,

ஆரோக்கியத்தையும் தந்த இறைவனுக்கும்,

என்னை கருவில் சுமந்த தாய்க்கும்,

என்னை சுமந்து கொண்டிருக்கும்

என் அன்புக் கணவருக்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


- முஜாமலாவின் கவிதைகளும், பின்நவீன இலக்கியக் கூறுகளும்: ஒரு குறுக்கு வெட்டுப் பார்வை 7
- என்னிடமிருந்து... 17

1. இனியும் நமக்குள் 21
2. விடுதலைச் சேதி 23
3. இந்தக் காதலில் 24
4. அதற்கு... 26
5. அன்பெனும் விதி 28
6. நிஜங்களை சுவாசிக்காதபோது 30
7. பெரும் தேடலில் 31
8. இனியும் புரியுமா 33
9. பிரிவுகள் தாண்டியும் 34
10. எத்தனை ஆயுதங்கள் 36
11. நான் மட்டும் எப்படி 37
12. சிரிக்கத் தெரியாதவள் 38
13. வேறென்ன 40
14. அவ்விரவு 42
15. முகவரியெழுதியது 43
16. இந்தச் சிரிப்பிதழ்கள் 44
17. இன்னும் வெகுநேரமில்லை 46
18. வெயில் 49
19. சில ரசனையும் பிடித்தங்களும் 50
20. அவற்றுக்கென 52
21. விலகல் 53
22. விழிவியப்பு 54


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. தேடலென்பது 55
24. சில புறக்கணிப்பு 56
25. இப்படித்தான் 58
26. இந்தத் தூறல் 60
27. கேட்காத பாடலொன்று 62
28. உறவுக்குள் நிகழும் 64
29. ஏன் படைத்தாய் 65
30. மனக்கதவின் தாழ்வாரத்திலிருந்து 68
31. நிஜம் தோற்கும் பொழுதொன்றில் 69
32. வேறென்ன செய்ய 70
33. காலமென்ற பெயருக்குள் 72
34. துயிலும் கனவுகளிடம் 73
35. ஒருபிடி வானோடு 74
36. இதழ் வரையும் 75
37. பார்வைப் பொழுதொன்றில் 76
38. நேச எதிரிகளே 77
39. தொலை நிலாப்போல 79
40. தொலைதூரக் குரல் 81
41. சொற்ப முகிலோடு 82
42. அதையே ஆயுதங்களாக்கி 84
43. இப்போது சொல் 86
44. பிழைத்த நிமிடங்களில் 88
45. மற்றுமொரு 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


3 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

# முஜாமலாவின் கவிதைகளும், பின்நவீன இலக்கியக் கூறுகளும்: ஒரு குறுக்கு வெட்டுப் பார்வை

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் எனப்படும் (கிராமமும் அல்லாத நகரமும் அல்லாத இயற்கை எழில் தாண்டவமாடும்) ஊரில் பிறந்தவர்தான் கவிஞர் முஜாமலா. இலக்கிய உலகில் 'வானம்பாடி' யாக சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கும் இவர் 'ரூஹின் சிறகுகள்' எனும் கவிதை நூலின் மூலம் தமிழ் கூறும் நல்லுலகுக்கு நூலாசிரியராக தன்னை தகவமைக்கிறார்.

"ஒரு பெண் திருமண வாழ்க்கையின் பின்னர் எழுதுவதென்பது எப்போதும் பெரும்பாடே. குடும்பம், சமூகம் மற்றும் சில நபர்களின் கிண்டல் கேள்விகளைக் கடந்தே பயணிக்க வேண்டியிருக்கும் அல்லது இருந்தது" என்று தனக்கான சவால்களை பட்டியலிடும் கவிஞர் அந்தச் சவால்களுக்கு தனது கவிதை நூலின் மூலம் காத்திரமான பதிலை வழங்கியிருக்கிறார். அதற்காக அவருக்கு எமது பாராட்டுகள் உரித்தாக வேண்டும்.

முஜாமலாவின் கவிதைகளைப் பொறுத்தவரை 'வானம்பாடி' என்ற புனைப்பெயரில் அவர் எழுதிக் கொண்டிருந்தாலும் 'வானம்பாடிக்' காலக் கவிதைகளில் தொடங்கி, நவீனத்துவக் கூறுகளைக் கொண்ட சொற்செறிவும், பொருட்செறிவும் நிறைந்த கவிதைகளை இவர் எழுதிக் கொண்டிருக்கிறார்.

'ரூஹின் சிறகுகள்' என்கின்ற இந்தக் கவிதை நூலிலும் அத்தகைய நவீனத்துவக் கூறுகளை பெரும்பாலான கவிதைகளில் அனுபவிக்க முடிகிறது. இன்றைய காலகட்டத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணைய இதழ்கள், கவிதை நூல்கள் என்று எல்லா ஊடகங்களிலும் இத்தகைய நவீனத்துவக் கவிதைகள் வெவ்வேறு வடிவங்களில் தினந்தோறும் நம்மை ஆச்சரியப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன. அத்தகைய ஆச்சரியத்தையே முஜாமலாவும் 'இனியும் நமக்குள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் முதலாவது கவிதையில் தொடங்கி 'மற்றொரு' எனும் கவிதை வரை நமக்கு தருகிறார்.

'இறுதிவரை' எனும் கவிதை, புதுமையான பாணி (கவிதை பாரம்பரிய தமிழ் கவிதை வடிவங்களை மீறுகிறது), தனியுரிமை (கவிதை ஒரு தனிப்பட்ட குரலில் எழுதப்பட்டுள்ளது) மற்றும் சமுதாய விமர்சனம் (கவிதை சமூகத்தில் உள்ள பாகுபாடு மற்றும் புறக்கணிப்பை விமர்சிக்கிறது) ஆகிய கூறுகள் மூலம் நம்மை சிந்திக்க வைக்கிறது.

ஆக்கிரமிக்கத் துடிக்கும்
அத்தனை திணிவையும்
தாங்கியபடி
முடிந்தவரை எதுவும்
தெரியாதது போல
கடக்கிறேன்
மௌனமாய் கடக்கிறேன்
எனது பிரபஞ்ச நியதிகள்
எப்போதும் இவர்களால்
பிழைக்கப் போவதில்லை
என்பதால்

என்ற வரிகள் மூலம் பலரது வாழ்வையும் நம் கண் முன்னே கண்ணாடி போல 'பளிச்செனக்' காட்டுகிறார். ஒரு நபர் தன்னைச் சுற்றியுள்ள உலகின் அழுத்தத்தையும், அதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிகளையும் விவரிக்கிறார். தங்களை ஆக்கிரமிக்கத் துடிக்கும் அனைத்து திணிவையும் தாங்கிக் கொண்டு, முடிந்தவரை எதுவும் தெரியாதது போல கடந்து செல்கிறார் என்பதை விளக்கி பிரபஞ்ச நியதிகள் எப்போதும் புரிந்துகொள்ள முடியாதவை என்ற பேருண்மையை எடுத்துரைக்கிறார்.

காலத்தைப் பற்றிய பிரக்ஞை காலத்திற்குக் காலம் வேறுபடுகிறது. இந்த நூற்றாண்டில் காலம் மிக விரைந்து மாறியிருப்பது போல் தோன்றுகிறது. இவ்வளவு விரைவாக காலம் மாறியதான தோற்றம் கொண்டதற்கு எத்தனையோ புறச்சூழல்கள்

4 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக உள்ளன. இந்தப் புறச்சூழல்கள் அனைத்தையும் எல்லாம் இலக்கியம் பிரதிபலித்துக் காட்டவேண்டும் என்று எப்போதுமே மானிட இயக்கம் இடைவிடாமல் முயன்று கொண்டிருக்கின்றது. அத்தகைய முயற்சியை முஜாமலாவும் மேற்கொள்கிறார். அவரது 'விலகல்' என்ற கவிதையில் உணர்வுகளை மிகவும் நேரடியாகவும், உணர்ச்சிகரமாகவும் வெளிப்படுத்துகிறார். கவிதையின் ஒவ்வொரு வரியிலும் உலகம் குறித்த வலி மற்றும் ஏமாற்றம் வெளிப்படுகிறது.

இனி வரும் இனிய காலங்களிலும்
தமக்காய் ஏதும் வேண்டாமென்ற
உச்சரிப்புப் பிழையோடு
தனது விலகலைச் சரிகாணும்
நேற்று உதிர்ந்த உயிரை
மீண்டுமொரு முறை
மீட்டிப் பார்க்கும்
இறுதி இரக்கமுமின்றி

என்ற வரிகள் மூலம் கால மாற்றத்தில் மனிதர்களின் மாற்றங்கள் பற்றிய யதார்த்தத்தை அழகுணர்ச்சியுடன் நமக்குள் ஊடு கடத்துகின்றார்.

தற்காலக் கவிஞர்கள் தனக்கென்று விதிக்கப்பட்டிருந்த உவமை, உருவகம், அணி, பாவகை, எதுகை, மோனை இயைபு போன்ற மரபுகளை நீக்கி கவிதை இயற்றுகின்றனர். உரைநடையைச் சிதைத்து கவிதையாக எழுதுகின்றனர். நேரில் பேசுவது ஒரு நேர்முகத்தன்மையுடன் இருக்கிறது. இன்றைய நவீன கவிஞர்கள் பலரும் இம்முறையைப் பின்பற்றி எழுதுகின்றனர். அத்தகைய நவீனக்கூறுகளை முஜாமலாவின் இந்நூலிலும் பல இடங்களில் அவதானிக்கலாம்.

'அன்பெனும் விதி' என்ற கவிதையில்

இதோ நீயும்
மகுடம் சூடிக் கொள்ளும் முதல்
விசுவாசம் குறித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரூபித்துக் கொள்
இனியென்றும்
அதன் விதிகளும் நியாயங்களும்
உனக்கெனவே
கடைசி வாக்குமூலம் அதையும்
பதிந்து வைத்திருக்கும்
பயப்படாதே

என்ற வரிகளின் மூலம் மனிதர்களுடன் இரக்கம் கலந்த இறுக்கத்தோடு உரையாடுகிறார். அவ்வாறே 'எத்தனை ஆயுதங்கள்' என்ற கவிதையில்,

மெலிந்துதிரும்
புன்னகையின் மொழிகளை
அள்ளிக் கொள்கிறேன்
கலைந்த
அதன் உருவம்
சிதைந்துவிடக் கூடாதென
புலன்களை மேம்படுத்தி
குளிர்காலமொன்றை கசியவிட்டு
வளர்கிறேன் எப்போதும்

இந்த வரிகளின் மொழி மிகவும் அழகாகவும், வெளிப்பாட்டுத் தன்மையுடனும் உள்ளது. கவிஞர் இயல்பான சொற்களைப் பயன்படுத்தி, புன்னகையின் மென்மையையும், அதன் சிதைவின் துயரத்தையும் தன்னிலைப் படுத்தியபடி துல்லியமாகப் பதிவு செய்கிறார்.

படைப்பாளனுக்கும், வாசகனுக்கும் மரபுக் கவிதைகளில் ஒரு பெரிய இடைவெளி இருக்கும். நவீன கவிதைகளில் அந்த இடைவெளியை குறைப்பது கவிஞனின் கவிதைகளில்தான் தங்கியுள்ளது. பலர் நவீனத்துவ கவிதை என்று சொல்லிக் கொண்டு சிக்கலான வார்த்தைகள், சிக்கலான படிமங்கள், சிக்கலான அர்த்தங்களை புனைய முற்படுகின்றனர். உண்மையில் அவை

5 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த பலதரப்பட்ட விமர்சனங்கள் இருக்கின்றன. அவை ஒருபுறமிருக்க முஜாமலா தனது கவிதைகளில் வாசகனோடு மிக நெருக்கமான பிணைப்பை உருவாக்கத்தக்க வகையில் தனது கவிதைகளை யாத்துள்ளார். பொதுவான பிரச்சினையை விட தனிமனிதனது நிலையினைக் கூறுவதால் படைப்பாளனுக்கும், வாசகனுக்கும் இடையேயுள்ள உறவு மிகவும் நெருக்கமாகிறது என ஜெயசிலா எனும் எழுத்தாளர் அவரது கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகிறார். இது நவீனத்துவ கலைகளின் முக்கிய அம்சமாகப் பார்க்கப்பட வேண்டும். படைப்பாளிகள் நவீன இலக்கியங்களை படைக்கின்ற போது இவற்றை கவனத்திற் கொண்டால் அவர்களது படைப்பு வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெறும்.

*கிழிந்து உருக்குலைந்த*
*கௌரவக் குப்பைகளாக*
*நீயும் நானும்*

*மனம் இருளேறித் தாண்டவங்களாட*
*மகிழ்வென*
*நிறம் பூசிக் கொள்கிறோம் நமக்குள்*

*இனியும்*
*நச்சரிக்க முடியாது போகும்*
*அன்பில்லாக் கணங்கள்*
*நீண்டு முதிர்ந்த உறவை*
*களவாடிச் சென்றிருக்க*

*சொந்த முகமும்*
*ஓரிதயமும்*
*தவறிய ஈரமில்லா மொழிகளோடு*
*கடந்து போகிறோம்*
*எதிர்முனையில்*
*காலத்தோடு ஒட்டாத*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுமொரு உலகு தனக்காய்
வண்ணங்களைப்
பிரிக்கும் ஒளிப் பள்ளங்களாகின

இந்தக் கவிதையில் கவிஞர் உறவின் வீழ்ச்சியை விவரிக்க மிகவும் கவர்ச்சியான மொழியைப் பயன்படுத்துகிறார். 'கிழிந்து உருக்குலைந்த கௌரவக் குப்பைகள்' மற்றும் 'மனம் இருளேறி தாண்டவங்களாட' போன்ற சொற்கள் உறவின், அழிவின் அளவை சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

அதேபோல, கவிஞர் உறவின் அழிவின் இருண்ட மற்றும் நகைச்சுவையான இருமுகத்தன்மையை நன்கு சித்தரிக்கிறார். ஒருபுறம், இருவரும் ஒருவருக்கொருவர் வெறுப்புடன் நடந்து கொள்கிறார்கள்; ஆனால், மறுபுறம் அவர்கள் தங்கள் உறவை மறக்க முடியாமல் போகிறார்கள். அவர்கள் தங்கள் மனதில் இருளில் மூழ்கி, மகிழ்ச்சியாக நடனமாடுவது போல் நடிக்க முயற்சி செய்கிறார்கள். இறுதியாக, கவிஞர் கற்பனை உலகத்தைப் பயன்படுத்தி ஒரு நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். இது ஒரு நல்ல முடிவு, ஏனெனில், இது வாசகர்களுக்கு உறவின் அழிவிலிருந்து ஒரு புதிய அத்தியாயத்தை விளங்க உதவுகிறது. இவ்வாறான வாசகர் — நேரடித் தன்மை நிறைந்த பல கவிதைகள் இந்த நூலில் விரவிக் கிடக்கின்றன.

மற்றுமொரு முக்கிய நவீனத்துவக் கூறான 'வாசகனுக்கு சிந்திக்க இடம் அளித்தல்' என்கிற தளத்திலிருந்தும் முஜாமலா அழகான கவிதைகளைப் புனைந்துள்ளார். படைப்பாளன் ஒரு மையத்தினை வைத்துக் கூறி வாசகன் அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைமாறி படைப்பிலிருந்து எந்தவொரு கருத்தினைக் கொண்டும் வாசகன் மையத்தைச் சிந்திக்க முடியும் என்பதன் மூலம் வாசகனுக்கும் படைப்பில் முக்கியத்துவம் தரப்படுகிறது. அதனையே 'வாசகனுக்கு சிந்திக்க இடம் அளித்தல்' என்ற நவீனத்துவக் கூறு வரையறை செய்கிறது.

இந்த நூலில் பல இடங்களிலுள்ள பல கவிதை வரிகள் வெவ்வேறு தளங்களில் வாசகர்களை சிந்திக்க வைக்கின்றன.

'விழி வியப்பு' என்ற கவிதையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகு முற்றியதென
திசைமீறிப் பறக்கும் பறவையின்
வெளியுலகக் கனவுகள் போலவே
கிழிபட்டுக் குலைகின்றன
சில பொழுதுகள்

தோள் மீதிருத்தி
கோர்த்தணிவித்த
இன்பப் பொக்கிஷங்கள் கண்டும்
மகிழ மறந்த அவை

என எழுதுகிறார். இதுவும் நமது கற்பனையின் எல்லைகளை விரிவுபடுத்தி விடுகின்றது. அதேபோல 'இப்படித்தான்' என்ற கவிதையில்,

இப்படித்தான்
எப்படி, எதற்காக
ஏன் அவ்வாறென
கேள்விகளோடு நின்று
முட்டி மோதிக் கொள்கிறது
தனிமை
பின்வாங்கிப் போகும்
மழைபோலத் திரண்டு

என்ற வரிகளும், 'இந்தத் தூறல்' என்ற கவிதையில்,

கிடைத்த ஏமாற்றங்களை
கரைத்துக் கொண்டு
சேற்றுச் சுவடுகளிலும்
பெரும் நதியொன்றை
உருவாக்கிய படி ——

என்ற வரிகளும், 'உறவின்' என்ற கவிதையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இட்ட விட்டைகள்
முளைத்து
பிளம்புகள் வளர்க்குமென
எதிர்ப்படும் வேளைகளில்
எழுதிக் கொள்ளும் தீர்க்க தரிசனங்கள்
சிறைப் பிடிப்புக்களென்றாக

போன்ற பல கவர்ந்திழுக்கும் வரிகளில் பல்வேறு மையக் கருத்துக்களை வாசகர் முன் சமர்ப்பித்திருக்கிறார்.

அதேபோல தான் ஒரு பெண்ணாக இருந்து கொண்டு பெண்களின் பிரச்சினைகளைப் பேசாமல் விட்டால் எப்படி? என்ற சிந்தனையில் சில கவிதைகளை வடித்திருக்கிறார். பெண்ணின் இயற்கையான ஆற்றலையும், அவளுடைய சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சமூகக் கட்டுப்பாடுகளையும் விவரிக்கிறார்.

பெண்மைக்கு உயிர் இருப்பதை, ஆனால் அது காலத்தின் அழுத்தத்தால் மறைந்து கிடப்பதைக் கூறுகிறார். பெண்கள் அடைந்துள்ள இடங்களிலும், அவர்கள் பாதுகாப்பாக இல்லை என்று கவிஞர் நம்புகிறார். அதனையே 'காலம் என்ற பெயருக்குள்' என்ற கவிதையில்,

உயிர் இருக்குதென
காட்டிக் கொள்ள முடியாதபடி
காலமென்ற பெயருக்குள்
மறைந்து கிடக்கிறது
பெண்மை

அடைந்து கிடக்கும்
இடங்களிலும்
பாதுகாப்பென எங்களால்
ஒழிந்து கொள்ள முடிவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றேனும்
கவர்ந்திழுக்க வேண்டுமென
புருவங்கள் தூக்கியபடி
அலைந்து திரியும் வலை விரிப்பாளனின்
திளைக்க வைக்கும் வார்த்தைகள்

எங்களின்
எல்லைக் கோடுகளை
சதுரம் வட்டமாகி
வட்டங்கள் புள்ளியென்றாகி
இன்னமும் இறுகிக் கொள்ளவே
செய்திருக்க

நகர முடியா இறுக்கத்திலும்
முகம் சுருக்க மறுக்கும்
சிறு புன்னகையின் நீளங்களில்
புரட்சிகள் செய்கின்றன

இந்த கவிதை, பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி ஒரு உணர்ச்சிபூர்வமான மற்றும் சிந்தனையைத் தூண்டும் கவிதை. இது, பெண்கள் தங்கள் சுதந்திரத்தைப் பெறுவதற்காகப் போராடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. கடைசி வரிகளில், பெண்கள் இந்த சமூகக் கட்டுப்பாடுகளுக்கு எதிராக போராடும் முயற்சிகளையும் கவிஞர் விவரிக்கிறார். அவர்கள் தங்கள் முகத்தை சுருக்காமல், சிறிய புன்னகையுடன் இந்த சமூகத்திற்கு எதிராகப் போராடுகிறார்கள் என்ற செய்தியையும் பதிவு செய்கிறார்.

அந்த வகையில், முஜாமலாவின் 'ரூஹின் சிறகுகள்' கவிதை நூலில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான கவிதைகள் நவீனத்துவக்கூறுகளை உள்வாங்கியிருப்பதோடு, அவை வாசகர் மத்தியில் மிகுந்த தாக்கங்களையும், வரவேற்பையும் பெறும் என்பது வெள்ளிடைமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத்தில், மொழி நடை, கற்பனை, உணர்ச்சிபூர்வமான வெளிப்பாடு 'ரூஹின் சிறகுகள்' என்ற அர்த்தம் நிறைந்த ஒரு கவிதை நூலை தரிசிக்கிறோம். ஒரு சிறந்த கவிஞர் என்பவர் எப்போதும் மனித உணர்வுகளை நுணுக்கமாகப் புரிந்து கொண்டு, அவற்றை அழகாகவும் உணர்ச்சிகரமாகவும் வெளிப்படுத்த முனைபவர் ஆவார். இந்த நூலிலுள்ள கவிதைகளைப் படிக்கின்ற போது முஜாமலாவையும் சிறந்த கவிஞர் வரிசையில் சேர்க்க முடிவது அவரது இலக்கிய அனுபவத்துக்கு கிடைத்த வெற்றி என்பதில் ஐயமில்லை.

வாழ்த்துகள்.

**கலாநிதி (கவிஞர்) எப். எச். ஏ. ஷிப்லி**

சிரேஷ்ட விரிவுரையாளர்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*01.11.2023*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னிடமிருந்து...

**தா**ன் வாழும் காலத்தின் கோலத்தை வார்த்தை வடிவமாக்கி கொடுப்பதே படைப்புத் திறனில் மிக உன்னதமானது என்பேன். கற்பனையை மட்டும் கரைத்துக் குடிக்கும் ஜாம்பவான்கள் மத்தியில் நானும் ஓர் சிறிய கவிஞன் என்பதில் பெருமை கொள்கிறேன். படைப்பாளி தனது படைப்புக்கான வார்த்தைகளை வாழ்க்கையிலிருந்து பெற வேண்டும். ஏனெனில் வாசகனிடம் அந்தப் படைப்பு வாழ்க்கையுடன் ஒத்துப் போவதாக உணரும் போதே ஒரு (படைப்பின்) எழுத்தாளனின் வெற்றியாக கருதப்படும்.

ஒன்றுக்கும் உதவாத வெற்றுக் கற்பனைகளை கவர்ச்சிமிக்க அழகியலாகப் படைப்பதில் எனக்குச் சற்றேனும் விருப்பமில்லை. ஒரு படைப்பு வாசகனை மகிழ்விக்க வேண்டும் அல்லது அழ வைக்க வேண்டும் இல்லை, புத்தியில் குட்டி புதுப்பாடம் ஒன்றையாவது நடத்திவிட்டுப் போக வேண்டுமென எண்ணுபவள் நான். எனவேதான் எனது கவிதைகளை அனுபவப் பொருளாகக் காண்பிக்க முனைந்திருக்கிறேன். அதன் பாடுபொருள் மறைபொருட்தன்மையாக இருந்தாலும் வாசகனால் நிச்சயமாக அதை உணர்வியலோடு உற்று நோக்க முடியுமென்றே நம்புகிறேன். அந்தவகையில, 'ரூஹின் சிறகுகள்'. நான் அசை போட்டு வெளிக்கொணர்ந்த அனுபவங்களும், பயணித்தாக வேண்டிய இலக்குகளும் இன்னும் கூட எனக்குத் தொலைதூரக் கனவுகளாகவுமே இருந்து கொண்டிருக்கின்றன.

எவ்வாறு இருப்பினும் இன்றும் கூட 'எழுதிப் பார்க்கும் — எழுதிப் பழகும்' முயற்சிகளாகவே என் கவிதைகளை நான் கருதி வருகிறேன்; இது அவையடக்கம் அல்ல உண்மையும்தான். பாரதி உரைத்த 'பெரிதினும் பெரிதை' எப்போதாவது எட்டி விடவும், உள்ளே கனன்று கொண்டிருக்கும் சமூக அவலங்களை சுட்டிக்காட்டவும் தொலைதூர ஆசையை தொட்டுப் பிடித்து விடவும் காலமாற்றத்தால் உறவுகளற்றுப் போன உணர்வியலை மீட்கும் சிறு முயற்சிகளாகவுமே இந்த ஆக்கங்களை என்னால் கொள்ள முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் காலத்திலிருந்து எழுதத் தொடங்கினாலும் மொழி வசப்படத் தொடங்கி சற்று மன முதிர்ச்சியும் வளரத் தொடங்கிய பிறகுதான் 'வானம்பாடி'யென என் முகத்தை அறிமுகம் செய்து கொண்டேன். தொடர்ச்சியாக எதையாவது எழுதிக் கொண்டு வந்தாலும் அச்சு வடிவில் இதுவரை புத்தகங்களாக வரவில்லை என்பது பெரும் கவலையே.

"படைப்பின் தளத்தில் இவளொரு சிறு குழந்தையென்றாலும் இவளுக்கான பெரும் கனவே இப்படைப்பு. அந்த வகையில் 'கடல்' பதிப்பகத்திற்கு நான் பெரும் கடமைப்பட்டுள்ளேன். கடல் பதிப்பகத்தின் நிறுவனர் திரு. விஜய் மகேந்திரன் அவர்கள் நல்ல கவிதைகள் எங்கே முளைக்கிறதோ அதை வடிவாக்கி போசனைச் செடிகளாக மலர வைக்கிறார். அவருக்கும் எனது பெரும் நன்றிகள் உரித்தாகட்டும்.

ஒரு பெண் திருமண வாழ்க்கையின் பின்னர் எழுதுவதென்பது எப்போதும் பெரும்பாடே. குடும்பம், சமூகம் மற்றும் சில நபர்களின் கிண்டல் கேள்விகள் கடந்தே பயணிக்க வேண்டியிருக்கும் அல்லது இருந்தது. அந்த நேரங்களிலெல்லாம் போதுமான வரை எனக்காக ஈடுபாடு காட்டி வருகின்ற எனது கணவர் மற்றும் பிள்ளைகளுக்கும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் நிந்தவூர் ஷிப்லி அவர்களுக்கும். இன்னும் பின்னட்டைக் குறிப்பைத் தந்துதவிய ரியாஸ் குரானா அவர்களுக்கும், எனது வளர்ச்சிக்கு உதவிய அனைவருக்கும் ஆழ்மன நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவள்,

**முஜாமலா**

நிந்தவூர்,
இலங்கை.
*25.10.2023*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூஹின்

# சிறகுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியும் நமக்குள்

இதோ
நம் நட்புக்கு விடுதலையளிக்கிறேன்
இனியும் நமக்குள்
கடக்க முடியாத சாட்சியங்களாய்
சில நினைவுகள்
இருக்கத்தான் செய்யும்

இருந்தாலும்
அவற்றையும் கண்ணீரில் கரைத்து
புதைத்து விடவே முயற்சிக்கின்றேன்

முடியாத போது
சப்தங்களின்றி
நெருக்கிக் கொள்ளும் இதயம்
உனக்காக
அடிக்கடி தற்கொலைகள்
செய்து கொள்ளட்டும்

அப்போதும் நீ
பிணைப்பை
முறித்துக் கொண்ட மகிழ்வில்
கிடைத்த சுதந்திரத்தை
கொண்டாடி மகிழ்ந்திரேன்

முள்வெளியொன்றில்
அடைந்து கிடப்பது
பூக்காடொன்றிற்கு
பெரும் நோக்காடுகள்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகவேணும்
உதறி விடுகிறேன்
உன்னை
பிரியும் தருணங்களும்
நமக்குள்ளிருக்கும்
வெறுமையை நிவர்த்திகள் செய்ய

பரிமாறட்டும்
வருத்தங்களில்லா
மென் மொட்டுக்களின்
சிரிப்பொலி கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைச் சேதி

என்றோ தறிக்கப்பட்ட
தன் சுதந்திரச் சிறகுகள்
கிடைக்கப் பெறுமென்ற மகிழ்வில்,

தன் றப்பிடமிருக்கும்
விடுதலைச் சேதியைக்
கொண்டு சேர்க்க
விரைகின்றன
அந்த ரூஹின் சிறகுகள்

பெரும் பொழுதில்
திடுக்கிடச் செய்யும்
அதன் தூய சிந்தனை
வீழ்ந்தொடிந்த
நியாயங்களுக்கெதிராய்
மீண்டும் மீண்டும் முளைத்தெழும்ப

வரவேற்பும்
முழுப் பணிவுடனும்
யாரைத் தேடிச் சாட்ட வேண்டுமோ

அங்கு
தன் நிழலை
தனிமைப்படுத்தும்
அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தக் காதலில்

இன்றோ நாளையோ
இடிந்துவிடக் கூடாதென கட்டிய
காதல்
கட்டுமான சூத்திரத்தில்
திடீரென ஏற்படும்
மைய மாற்றங்கள் போலவே
உன் பிரிவு

அடிமன இயல்பை
தொலைத்துவிடக் கூடாதென
பிடித்து வைத்திருக்கும்
இதயத்தின் மூடு தழும்புகளில்
இப்போதும் நீ

குரல் காட்ட மறுத்து
ஊமையனாய்
செவிடனாய்
குருடனாய்
மீண்டும் மீண்டும்
அதிர்வுகளையே ஏற்படுத்திச் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிமானங்களுக்குள்
சிக்கித் தொங்கும் நெஞ்சை
பாடையில் வளர்த்தி
தூக்கிச் செல்ல முடியாதவளாய்
இனியும் நான்

புரியாத கேள்விகளோடும்
அழுது முடிக்கும்
கோபத்தின் தழும்புகளோடும்
புதையும் வரைத் தேடுகிறேன்
இந்தக் காதலின் அறம்
எதுவரையென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதற்கு...**

காதல் மொழி
தெரியாதொரு நகரில்
சில நாட்கள்
நீயொரு பித்தனாய்
அலைந்திருந்தாய்

மன நெரிசலும்
இதய இடிபாடுகளும்
நிறைந்த அந்நகரமே
தனது
ஜீவித வாசலென
முடிந்த மட்டும்
நினைவுகளில் பதிய வைத்தாய்

அன்பொழுகும் போதெல்லாம்
தாங்கிப் பிடிக்க முடியாத
அதனையும்
அதன் வார்த்தைகளையும்,

தனக்கான
அலங்கார ஒளிர்வுகளெனச்
சொல்லியே
அவாவுறச் செய்தாய்

பின்னொரு நாளில்
மறந்து போக
அதன் தெருக்கள்
இயல்பில்லையென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

அந்த நகர்
தன் இயல்புகளை
தேய்மானம் கொள்வதாகவும்
எச்சங்கள்
பீச்சிச் சென்றாய்

இப்போதும்
அதே இடிபாடுகளுடனும்
மன நெருக்கடிகளோடும்
இன்னும் கொஞ்சம்
வாழப் பழகிக் கொள்கிறது
அதுவும்

தனது நொந்து போன
உறுப்புகளுக்கு ஆறுதல் கூறவும்
கரிக்கும் கண்ணீரை
துடைத்துக் கொள்ளவும் முடியுமான
அதனால்

இன்னமும்
இங்கு திரிந்து கொண்டிருக்கும்
எத்தனை நாற்றங்கள்
தன்னை ஆட்கொண்டாலும்,
சரிந்துவிடாமல்
நிற்க முடியும் என்றாகிறது
அதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பெனும் விதி

எதற்கும் பெறுமதியில்லா
உலகில்
யாரையும் இயக்கவும்
நிறுத்தவும்
அன்பெனும் விதி
எழுதப்படுகிறது

இதோ நீயும்
மகுடம் சூடிக் கொள்ளும் முதல்
விசுவாசம் குறித்து
நிரூபித்துக் கொள்

இனியென்றும்
அதன் விதிகளும் நியாயங்களும்
உனக்கெனவே
கடைசி வாக்கு மூலம் அதையும்
பதிந்து வைத்திருக்கும்
பயப்படாதே

விதிக்கப்பட்ட
எல்லைகளுக்கு அஞ்சி மாயும்
உனது அழுகை
உனது கோபம்
உனது மகிழ்வு
உனது துன்பம்
உனது இன்பம்
உனது ஆசை
உனது நேசமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் பலியிட்டே
அதனோடு உறவாட
முன்வர வேண்டும்

சற்றுப் பிசகினாலும்
மொத்தமும் காணாமலாக
ஒரே நொடியில் மறைந்து போவாய்

நான் சொல்வதைக் கேள்
நேரமிருக்கிறது
இன்னும் கண்டறி...
தயவு செய்து கண்டறி...

அந்த அன்பில் பலியாகும்
சாட்சியமாய்
நீயும் நானும்
இருப்பது உறுதியாகும் வரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிஜங்களை சுவாசிக்காதபோது

சில பொழுதுகள்
நிஜங்களை
சுவாசிப்பதில்லை
தனக்குள்ளிருக்கும் மனக்கசப்பை
கொட்டித் தீர்க்கவும்

தனக்கேற்பட்ட விம்பங்களையும்
சங்கடங்களையும்
புனைவுகளோடு சிலாகிக்கவுமே
முனைப்புக் காட்டும்
அவைகளுக்கு

மென்மைத்தளமோ
அடுத்தவருக்குள் இருக்கும்
அகவெளியின்
ஆத்ம தீண்டல் பற்றியோ
அறிந்திருக்க முடிவதில்லை

துருத்திக் கொண்டு நிற்கும்
வார்த்தைகள்
பின்னொரு நாளில்
இளைப்பாறியதென
குசலம் விசாரிப்பது கண்டு

நலன் பெருகுமா
தான் விட்ட எச்சத்தில்
கருகிப் போன இதயம்
பிழைத்திராமலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 B C2P-8477_Ruhin Siragugal_5.5x8.5_CC.job Dps-2

## பெரும் தேடலில்

நேற்றொரு நாள்
இருள் பள்ளத்தில் விழுந்திருந்த
இதயம் அதை மீட்டெடுக்க
வேண்டிச் சென்றிருந்தேன்

கண்கள் கட்டப்பட்டு
கால்கள் தாண்டக் கூடாதென
இரும்பாணிகளால்
பூட்டப்பட்டிருந்தன சுற்றிலுமாய்

செயலிழந்த செவியிரண்டும்
இடிபாடிகளுக்குள் புதைந்திருக்க
ஒட்டுமொத்த இயல்பிழத்தலோடு
ஏகாந்தப் பரவுகை

பெரும் தேடலில்
அதன் உயிரோட்டச் சிறு
தளும்பொன்றே மீந்திருக்க

நீண்ட இடைவெளிக்கு
பின்னர் தோன்றும் சிறு கசிதல்
அதுவென்பதால்
எட்டி நின்று விசாரிக்க மனமின்றி

சிதறுண்ட
உணர்வுகளைப் பூட்டி
இருள்
விலத்துகிறேன் இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்த நிறத்தில்
கடும் பிசுபிசுப்பாய்த் தோற்றமளிக்கும்
அதன் துகள்கள்
சற்று முன்னர்தான்
கெட்டுப் போகத் தொடங்கியிருக்க
வேண்டும்

ஆனாலும்
அதன் வாசனை
இப்போதும்
என்னை ஒத்ததாகவே

சிந்தனைகள் நீடிக்க
மிகுந்த பிரயத்தனங்களெடுத்துச்
சுமந்து வந்தேன்
அந்த இதயம் அதை

உயிரில் பதிக்க
விருப்பங்கள்தான்
இருந்தாலும்

குறைபட்ட அப்பாகங்கள்
வெளுக்க வேண்டுமென
தகுந்த முயற்சிகளோடு
நலன் நாடிப் பிரார்த்திக்கின்றேன்
முப்பொழுதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியும் புரியுமா

அதிர்ந்து தும்மி விடுவோமென
அடக்கிக் கொள்ளுமந்த
இதழ் இறுக்கங்களே
அது வரையும் புன்னகைகளாக

நேற்றைய காய்ப்புக்களும்
இன்று குறைபட்டுக் கொள்ளும்
சொல்லாணிகளுமாய்
நழுவிக் கொண்டிருக்குது மகிழ்வு

பிழைத்துவிடக் கூடாதென
ஆழம் பார்த்து
இறக்கும் முயற்சிகளே
சதாவும் வம்பிழுக்க

அந்த
வேதனையின் கவனிப்புக்களுக்கு
வேண்டிப் பணியும்,

இந்த
இதழின் நுணுக்கங்கள்
இனியும் புரியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுகள் தாண்டியும்

உருவமழிந்து
கால் நூற்றாண்டை
தொட்டிருக்க வேண்டும்
இப்போது

பண்பாட்டை
கலைத்தெறியக் கூடாதென
மிகுந்த ஆழமாய்
புதைத்தொடுக்கிய நேசத்தின்
தொடர் போராட்ட
சிறு மூச்சொலி இன்னுமே

பாரம் தாங்க முடியாதென
நிகழ்வின் தசைகளை
மெலிதாய்க் கீறி விட்டிருக்கிறது
பிரிவுகள் பல தாண்டியும்

காலம் உணர்த்திய
அந்தப் பாசத்தின் முகவுரு
உருக்க மடலொன்றை
கண்ணீர்த் துளிகளாய்
வரைந்தனுப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியே
மெய்வருத்திக் கொண்டு
காத்திருந்த தன்னிடத்தை
வேறு யாராலும்
நிரப்பிவிட முடியாதெனும் கர்வம்

துடித்துக் கொண்டே தொடர்கிறது
அன்பின் மறுப்பிடங்களை
விலக்கி விட்ட திருப்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனை ஆயுதங்கள்

மெலிந்துதிரும்
புன்னகையின் மொழிகளை
அள்ளிக் கொள்கிறேன்

கலைந்த
அதன் உருவம்
சிதைந்துவிடக் கூடாதென
புலன்களை மேம்படுத்தி
குளிர்காலமொன்றைக் கசிய விட்டு
வளர்க்கிறேன்
எப்போதும்

அதுவும்
கேள்விகள் முடம்பட
மொத்த ரசனையும்
பிழைத்துப் போன பிறகு
தனக்கிந்த மழைக்கரம்
தேவைப்படாதென
மனம் அதட்டுகிறது

துயருறும் போது
வசந்தங்களின் வளைவுகளைச்
சுரீரெனப் பூட்டிக் கொண்டு
சடுதியாய் உதிரும்
அந்த இதழ்களுக்கு மட்டும்
எத்தனை ஆயுதங்களோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் மட்டும் எப்படி

உண்மைகளை
வேண்டுமென்றே காணாமலாக்கும்
உறவின்
நிலைமாற்றங்களை என்னவென்பது

உரத்துப் பேசவோ
பிரிந்து போகவோ மனமின்றி
அவ்வப்போது
அழுது துடைக்கும் ஆத்மா
கடக்க முனைகையில்

சொட்டு நின்று
தொட்டுக் காட்டிக் கேட்கிறது
இந்த ஏமாற்றத்தின்
விலாசங்களின்னும் நீளுமாவென

நான் மட்டும்
எப்படி
உறுதிபடக் கூற

சுருக்குக் கயிறுகளும்
எச்சரிக்கை கழுத்தும்
திடுக்கிடும்
திடீர் திருப்பங்களோடு
தினமொரு வியப்பளிக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிக்கத் தெரியாதவள்

நம்பிக்கை தொலைத்த
இரவொன்றில்
நெளிந்து புரளும் ஆத்மாவின்
அவஸ்தைகள் எதுவென
உணர்ந்திருக்கின்றாயா

நடைபெற்ற நிகழ்வின்
ஒவ்வொரு உச்சரிப்பும்
கவ்விப் பிடிக்கும்
பிசாசொன்றினைப் போல
அவ்வாத்மாவை
தொடர்ந்து கொண்டிருக்க

சில நேர இயலாமை
வெட்கித்து ஜீவிக்கும்
வேட்டை மிருகம் போலவே

மற்றொரு நேரம்
தன்னுறக்கம் கெடுக்கும்
அறுதியான வாதமாகவும்
போராட எத்தணிக்க

முடியாத கீறலுடன்
பெருக்கெடுக்கும்
கண்ணீர்த் தழும்புகள்
இரவின் போர்வைகளை நீட்டியபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC job Ups-2

நெடுந்தொலைவாகி
இருளை மட்டுமே நிறைத்திருக்க
விடாமல் துரத்தும்
அந்த நான்கு சுவர்களின் கூடென்பது

வெறுமனே
அகாலங்களை விதைக்கும்
அடுத்தொரு நாளின்
அவிழ்தலாய்

ஒரு
சிரிக்கத் தெரியாதவள்
இல்லை
அன்பெனும் ஒளி குன்றியவளை
மட்டுமே
வளர்த்தெடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறென்ன

இறுதி இருப்பில்
இருந்து கொள்கிறது
இதயச் சுவர்கள்

இனி அங்கு
வீழ்த்தப்படவும்
வீழ்ந்து மடியவும்
இல்லை
துயருற்றிருக்கவும்
ஏதும் இருக்கப் போவதில்லை

உறைந்த கனவுகள்
சிதறிய ஞாபகங்கள்
குற்றுயிரான உணர்வுகள்
மீந்து போன வருத்தங்களென
இனியேதும்
எஞ்சியதாகவும் தெரியவுமில்லை

இருந்தாலும்
நம்பிக்கை வேர்கள்
அதன் பற்றுதலை
இனியும்
விட்டுத் தொலைக்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும்
இறுதி முன்னெடுப்புக்கள்
மொத்தமும்

கண்ணீரின்
கணப் பரிணாமங்களாய்
உயிரின் எச்சங்களில்
சதாவும்
மிகைக்கும் தயார்படுத்தலென்பது

இனியும்
அவ்வன்பு பிழைத்தலுக்கான
வழியேயன்றி வேறென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவ்விரவு

ஒரு இரவொன்றின்
நீள்தலென்பது
சில யுகங்கள் கடப்பதாயும்,

கொட்டிக் கிடக்கும் கும்மிருட்டில்
வழி தேடும் விடைகளின்
தொலைவுகளாகவும்
தூக்கத்தை விலக்கி வைக்க

உயிரோடிடும்
துன்பங்களின் மலிதலிலிருந்து
குறுகிக் கொள்ளும் மனம்
இதம் தருமொரு
விடுதலைக்காய் ஏங்கியபடி

அவ்விரவின் அர்த்தங்களாய்
வெகுதூரம் வரை காய்த்துக் கிடக்கும்
நிசப்தங்களின்
நிர்வாணத்தை ருசிக்க

தனக்கென்று
பரப்பி விட்டிருக்கும்
வெள்ளிகளின் குளிர்மொழியில்
மகிழ்வின் தோற்றங்களை
வெறிக்கப் பார்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவரியெழுதியது

மழைக்கு
முகவரியெழுதியது யார்...

சாக்கடையில் விழுந்ததால்
அது சகதியென்றும்
நதிகளில் கைகோர்த்ததால்
அது கங்கையென்றும்,

பூவிதழ் கடத்திச் செல்ல
அடைக்கலமானது தேன்துளியெனவும்

இப்படியே விழுந்த
இடங்கள் தான்
நிறைவளிக்கும் பதமென
அர்த்தங்கள் வரைந்துவிட

வழிதெரியாமல்
தொலைந்து விட்டு
தோற்றழுத பருவம் அதில்

இயல்புநிலை மீறாமல்
நீண்டு
அடங்கி மகிழ்வித்த

அதன்
முகமறியாச் சேதியை
யாரறிவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தச் சிரிப்பிதழ்கள்

அடக்குமுறையொன்றை
எதிர்த்து வெளியிடும்
இந்தச் சிரிப்பிதழ்கள்
ஏதோவொன்றை
அழுத்திச் சொல்கின்றன

கொஞ்சம் பாரமாக
கொஞ்சம் கோபமாக
கொஞ்சம் அலட்டலாக
கொஞ்சம் ஆராவாரமாக

இன்னும் அதுவொரு
போராட்டமாக
பெரும் தழுவலாக
நிறைந்திருக்கும் அழுகையாக

அதுவுமில்லையென்றால்
உங்கள் பார்வைக்கென்றும்
பொதுவானது போல
இல்லை

மழலை முத்தத்தின்
முதுமை தேர்ச்சிக்கு ஒப்பாக
எப்படித் தோன்றினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை குறித்து
அதிக கவனமெடுங்கள்
பெரும் வலியையும்
மிகச் சுவாரஸ்யமாய் வீழ்த்திப் போகும்
அவற்றின் குறிப்பென்பது

அர்த்தப்படும்
உயிர்க் கூடொன்றை நெருங்க
எத்தனை பரிகாசிப்புக்களை
கடக்க வேண்டி இருந்திருக்குமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் வெகுநேரமில்லை

ஒரு சிறு முன்னிரவில்
படுத்திருக்கிறேன்
இப்படியே எத்தனை நாட்கள்
கழிந்ததென ஞாபகமில்லை

இமைகளின் மேலமர்ந்து
கொண்டிருந்த இறுக்கம்
தீராப்பசியோடு
உடல் முழுவதும் விரிந்து கொண்டிருந்தது

ஓ... .ஓ...
இதுதான் அந்த மரணத்தின் நெருக்க
வருகையோ !

வாழ நினைத்து
பரத்திப் பார்த்த நாட்களெல்லாம்
இன்றென் முதுகுக்கு கீழால்
சுருட்டப்படும் வலி
எதையோ பிடுங்கியது போலவே

இப்போதென்னால்
அசையவோ
ஓசைகளெழுப்பவோ முடியவில்லையே
ஓடிக் களைத்த கால்கள்கூட
ஆட மறுக்கின்றனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குடலும்
ஈரலும் கூட
அருகிலிருப்பவர்களுக்கு
ஏதோவொரு சேதியை அறிவிப்புச்
செய்திருக்கக்கூடும்

சுருங்க மறுக்கும் இதயம்
அதை
பலவந்தமாய்ப் பொத்திப் பிடிக்கும்
மரண தூதரின் முயற்சிகள்
மரத்துக் கொண்டிருக்கும்
பாகங்கள் தாண்டியும் விரவ

யாரும் நெருங்கியென்னை
தொட்டுவிடக் கூடாதென
அவாவுறும் மனது
நிர்பந்தமாய் விலங்கிடப்பட்டிருக்க

சத்தங்களால் சூழப்பட்ட காது
இப்போது
நிசப்தங்களைச் சுவைத்தபடி

யாரோ கூறும்
உணவு இறங்கவில்லையென்ற
சப்தமே
அதன் இறுதித் துலங்களாக
இருந்திருக்க வேண்டும்

இப்போது
கண்கள் செருகிக் கொள்ள
நெற்றி சுருக்கிப் பார்க்கிறேன்
மனம் விரிய மறுத்த கூட்டமொன்று
தலைமாட்டிலும் கால் பகுதியிலும்
தவறாமல் கூடியிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக் கடந்து செல்லும்
மரணத்தின் குரல் மட்டும்
மொழிபெயர்த்தறிய வைக்கிறது
சிறு புன்னகையை

வழிவிடுங்கள்
விடைபெற
இன்னும் வெகுநேரமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 B C2P-8477 Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

## வெயில்

கடத்திப் போன மழையின் துளிகளை
மறைத்து வைத்து
தின்று கொழுத்திருக்கும்
அனல்வெளி கண்டு
முகம் சுழிக்கையில்

குளிர்காற்றொன்றை அனுப்பி
பெருமை பேசிக் கொள்கிறது
வானம்,
நேற்றைய பொழுதும்
அதற்கு முந்தியதும் போலவே

இன்றும்,
இருக்காதென நம்பியெழுந்த
வயிறு உப்பாத
அந்தப் பறவைதான்
இன்னும் கொஞ்சம் பாவமாக

பணி முடிந்து
பத்திரமாய்க் கூடு திரும்புவோமென
ஓடித் திரிந்ததற்கு
கிடைத்ததென்னவோ

வெயில் பங்குபோட்ட கொப்பும்
தாங்க முடியவில்லையென
தரையில் விழுந்து
தற்கொலை செய்துகொள்ளும்
வியர்வைத்துளிகளுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில ரசனையும் பிடித்தங்களும்

எப்போதும் ஒருவகை
பரபரப்புடன் கழியும் மனச்சூழல்
இப்போதெல்லாம்
சற்றுப் பின்தங்கிக் கொள்கிறது

சுய மரணக் குறிப்புக்களுடன்
பலிச் சடங்கொன்றில்
பரிதாப உருச் சிதைவுக்கென
அமர்ந்திருக்கும் உறவொன்றின்
அடையாளக் கழிவாகவே
அது

முரண்டு பிடித்து
பிடிவாதமாய் விரட்டித் தொடுத்த
அகாலங்களின் கொள்முதல்
இன்றைக்கும்
விரோதிக்கும் தழுவல்களாக

ஆரவாரங்களின்றி
இறுக்கங்களால் பின்னப்பட்ட
தற்கொலை முனையிலிருந்து
குதித்துக் குதித்து
செத்துக் கொண்டிருக்கிறது மனம்



25 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும்
சோர்வின் வடுக்கள்
மிகத் துல்லியமாய்
தெரியவில்லையென்ற வருத்தம்
நாள் முழுக்க அவர்களுக்குள்

சொட்டுச் சொட்டாய்
மடிய வேண்டுமென
உச்சிமுகர்ந்து
உயிரோடு வைக்கும்
அப்பரிசோதனை முடிவுகள்
எழுதிப் போகின்றன

அந்த முகங்களின்
மொத்த ரசனையும்
அவற்றின் பிடித்தங்களும்
எதுவென்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவற்றுக்கென

மொழிதலில்லா வார்த்தைகளில்
பெரும் பாரங்களை
இறக்கி வைக்க முயல்கிறது மனம்

உணர்வுக் கூடுகளின்
ஊர்வலம் போலாகும்
அவைகளுக்கு

சுமக்கும்
வலியை வெளிப்படுத்தும்
குரல் வேண்டியொரு
அலறலோ
அவசரமோ
இருப்பதேயில்லை

சிக்கனம் கொள்ளும் அவற்றுக்கென
சிறு புன்னகை போதும்
மிச்சமிருக்கும் வாழ்வினையும்
அவ்விதழ்கள் நிரப்பி மகிழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலகல்

இப்போதெல்லாம்
சற்று தூரமாகி
சலித்துக் கொள்கிறது வாழ்க்கை

வலிமைகள் மேலோங்க
அன்பு நேர்மையெனக் கொண்ட
உறுதிகளை
உடைத்துக் கொள்ளும்,

உறவொன்றின் சமராடுதல்
சிரிக்க மறந்த
மனமொன்றைத் தோற்றுவிக்க

இனி வரும்
இனிய காலங்களிலும்
தமக்காய் ஏதும் வேண்டாமென்ற
உச்சரிப்புப் பிழையோடு
தன் விலகலைச் சரி காணும்

நேற்று உதிர்ந்த உயிரை
மீண்டுமொரு முறை
மீட்டிப் பார்க்கும்
இறுதி
இரக்கமுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிவியப்பு

சிறகு முற்றியதென
திசை மீறிப் பறக்கும் பறவையின்
வெளியுலகக் கனவுகள் போலவே
கிழிபட்டுக் குலைகின்றன
பொழுதுகள்

தோள் மீதிருத்தி
கோர்த்தணிவித்த
இன்பப் பொக்கிஷங்கள் கண்டும்
மகிழ மறந்த அவை

அடங்கும் சிறகின்
ஆசைகள் தைக்கையில்
ஆயிரம் திகைப்போடு
காலம் பிழைத்ததென
ஓடிக் கொண்டிருக்கும்

முன்னொரு போது
தனக்காகவிருந்த
நல்ல கணம் பற்றிய ஞாபகங்களோடு
விழிவியப்புக்களைச் சபித்தபடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

## தேடலென்பது

ஒரு நெடிய பொழுதில்
மிக அமைதியாக
உட்கார்ந்து கொள்கிறது மனம்

தான் மாண்ட சேதிகளை
மறைத்திருக்கும்
அதன் நிழலிடுகை,

தன் முன்
நிலைத்திருக்கும் ஏமாற்றங்களையும்
தனக்குள்
பூத்திருக்கும் நிஜங்களையும்
விழுங்கியபடியே தூரங்களாக

அதன் விடுதலையின்
தேடலென்பது
மிக எளிதாய் சிரிக்க தோன்றும்
முகமொன்றில்
அத்தனை சாத்தியங்களாகும்

மற்றுமொரு
பற்றுதலுக்கான
நினைவுகளைப் பொறுக்கியபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில புறக்கணிப்பு

விடுபட்ட இடங்களை
இப்போதெல்லாம்
நிரப்பிச் செல்ல விரும்புவதில்லை
மனம்

சலனமேதுமின்றி
இதற்கு முன்னரும்
தன்னை
தொலைத்து விட்டதாய் சொல்லி
இனிப்புக்கள் பகிர்ந்த,

அதற்கென்றொரு
இரகசியங்கள் குறிக்க
எண்ணங்கள் கொள்ளவுமில்லை
அதுவும்,

நான் என்பதும்
அவர்களென்பதும்
ஒன்றல்லவென்பதை
கற்றுணர்ந்த பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் நிர்வாணம் மறைக்க
ஒட்டுத் துணி தேடியும்
எல்லாவற்றையும்
சகித்துக் கொள்வேனென்றும்

அவற்றின்
தாளாமைகளைப் போற்றவும்
ஒப்பவில்லை அதுவும்

கைவிடப்பட்டாலும்
மகிழ்வுடனே விரியும்
அதன் பிரபஞ்ச உயிர்கொள்ளலுக்கு
சில புறக்கணிப்புக்கள்
தேவையென்றாவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படித்தான்

சட்டெனப் பிரியும்
தனிப் பாதையில்
தொலைந்த கதை புரியாமலே
கடந்திருக்கிறோம் நீயும் நானும்

அன்று
நாம் வெகுதூரமாய்
அடுக்கிக் கட்டமைத்த
உறவொன்றின்
அதுர உச்சரிப்புக் கூட
மறந்திருக்குமோ நமக்குள்

இன்னும்
தொட்டுத் தொடரக் கூடாதென
வீம்பில் விட்டுப்போன கணங்கள்
நிறைவோடுதான் மலிந்ததோ
உனக்குள்ளும்

இல்லை
நாடோடி போல வேறிடம் தேடிக்
கூடடைந்தனவோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையே...!
தொலைவில் அவை
பெருகிய
சேதிகள்கூட கிடைக்கவில்லயே

இப்படித்தான்
எப்படி
எதற்காக
ஏன் அவ்வாறென

கேள்விகளோடு நின்று
முட்டி மோதிக் கொள்கிறது
தனிமை
பின்வாங்கிப் போகும்
மழைபோலத் திரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தத் தூறல்

பெய்யும்
மழை மேகம் போலவே
கனிந்து கிடக்கிறது நெஞ்சம்

எத்தனை பாரமென்றாலும்
யாரையும் மிதித்திடாமல்
ஆசிர்வதிக்கும்
அதன்
குளிர்விளைச்சலென்பது

காலத்தின் புழுதிகளை
அடக்கும்
பெரிய விண்ணப்பமொன்றோடு
உயிரூற்றிச் சிரிக்க

அவ்வப்போது வரவேற்கவோ
இன்னும்
இந்தத் தூறல்
உபயோகமில்லையென
எப்போதும்
மறுதலிக்கும் காட்சிகள் காணவோ
ஏக்கங்கள் கொண்டதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

புல்லின் நுனியில் தோன்றிடும்
பூமுகம் போலவோ
சாலையோரச் சருகொன்றைப்
புனிதப்படுத்தும்
துப்புரவுத் தொழிலாளியாகவோ

கிடைத்த ஏமாற்றங்களை
கரைத்துக் கொண்டு
சேற்றுச் சுவடுகளிலும்
பெரும் நதியொன்றை
உருவாக்கிய படியே மகிழ்ந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேட்காத பாடலொன்று

கேட்காத பாடலொன்றை
இசைத்துக் கொண்டிருக்கிறோம்
நமக்குள்

மீதமாகும் பிரிவுகள்
சற்று அழுத்தியே கையொப்பமிட்டிருக்க
இப்போதெல்லாம்
வாழ்தலை மறந்து
வெகுநாட்களாகி விட்டிருக்கிறது
எனக்கும்

நேற்றுக்கூட
அறவே மறந்தாய்
அவசரத் இனிப்புகள் பரிமாறி
வாழ்த்தொலிகள் பகிரப்பட்டதாய்
சேதிகள் வந்தனவே

கடந்து போவதும்
அடுத்து வருவதை எதிர் கொள்வதுமே
நிதர்சனமென
புரிந்து கொண்டியிருப்பாய் போலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவாயில்லை
விழி வழிய
எழுதிக் கலையாமல்
அடுக்கிய கவிதைகளை மட்டும்
யாரும் வாசிக்கக் கூடாதென
ஆழக்கரைத்துப் புதைகிறேன்

ஒரு புறக்கணிப்பின்
துயர் சாட்சியங்களாய்
நீயும் நானும் இன்னுமே
நீடித்திருக்க வேண்டும் என்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுக்குள் நிகழும்

வாழ்வின்
மறுப்புக்களைக் கூட்டி
வருத்துக் கொண்டிருக்கிறது மனம்

இறந்து விழும்
இதயத்தைச் சூழ்ந்து கொள்ளும்
ஈக்கள் போலவே
இன்றைய
உறவின் எச்சங்களும்

தான் இட்ட விட்டைகள்
முளைத்து
பிளம்புகள் வளர்க்குமென
எதிர்ப்படும் வேளைகளில்
எழுதிக்கொள்ளும் தீர்க்க தரிசனங்கள்
சிறைப் பிடிப்புக்களென்றாக

விளையாடாதீர்கள்
புரியாமல் நிகழும் விரல் நீட்டலென
சுடருக்குள் இறுகும்
இருள் முடிச்சுக்களை,

அவிழ்த்து அவிழ்த்தே
ஏத்தனை முறை
களைப்படைந்திருக்கிறேன்
தெரியுமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

## ஏன் படைத்தாய்

ஆசைகளை மட்டும்
சுமந்து திரியும்
தெருநாய் போலாகிறானா
மனிதன்

விரசமான
கழிப்பிடம் அறியா மகனாய்
விருந்தின் சுவை வடிவமென
நேற்றுமிரு பெண்களை
ஊர்கூடித் துகிலுரித்து
இச்சைக்கொட்டிய காட்சிகள்
அரங்கேறியதாமே

மனம் பதைபதைக்க
வருத்தங்களெல்லாம்
வந்து போனது
அந்தக் கயவர்களை
ஈன்றவள் மீது தான்
பாவம் அவள் மட்டும்
என்ன செய்வாள்

பாவையைச் சிதைக்கும்
பாதகனாய் வளர்வானென்று
அறிந்திருந்தால்
அன்றே
கருவறையைக் கழுவியிருப்பாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்க வேண்டிய கடவுளும்
கல்லாகிப் போனதால்
மீட்க வேண்டியவர்களும் முடமாகி
போனார்களோ

குற்றம் முடிந்த பின்னர் வரும்
குடைகள் போலவே
இன்றைய மீடியாக்களும்
தகவலுக்கு மட்டும் தாவணிகள் போட்டு
உண்மைச் செய்தியென
உலகிற்கு புடம்போட

கிழித்தெறிந்த ஆடையில்
நாணிய பெண்மை கண்டு
கோணிச் சிதையாமல்
பார்த்திருந்த முகங்களில் காண்கிறேன்
வெறிகளை

வெட்கம் கெட்டவர்களே
சிதைக்கப்படும் யோனிகளால்
உங்கள்
தேசத்தின் மானம்
கொடிகட்டிப் பறக்கும்
சேதி அறிவீர்களா

எங்களது
வாதை நிரம்பிய மூச்சுக்களே
தினமொரு விளம்பரமென்றாக
தண்டிக்க வழியில்லா
சட்டத்தின் கம்பிகளில்
இன்னும்
எத்தனை வளைவுகளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்து விடப்பட்ட போராளியாய்
துளித்தடுப்புமின்றி
கேட்டுக் கொண்டே இருக்கிறது
இன்னும்
அந்த ஈனக்குரல்

இறைவா!
அநீதியின் அவனியில்
ஏன் படைத்தாய் எங்களை
பெண்களென!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனக்கதவின் தாழ்வாரத்திலிருந்து

வலியோடு பிய்த்தெறியப்பட்ட
உறவொன்றின் நேர்காணலாய்
அவன் முகம்
அன்புக்காய் ஏங்கும்
அத்தரிசு பூமியில்
இப்போதும்

சொல்ல முடியா
ஆதங்கங்களோடு மனக்கதவை
அகலமாய் திறக்கவென்றே
அவ்வெளிப்படுகை
அசைந்து சிரிக்க

சற்று தூரங்களாகிப் பொழியும்
சாரலொன்றோ
மின்னி மறையும் நினைவுச் சிலிர்ப்போதான்
இழைத்துப் போன
அவன் மூச்சுக் காற்றை
ஊதிப் புதுப்பித்தபடி

வருடங்கள் கழிந்தாலும்
அவ்வப்போது எதிரொலிக்கும்
மொத்த மகிழ்ச்சியாய்
மனக் கருவிழிகளில்
இன்றும் வயதாகாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிஜம் தோற்கும் பொழுதொன்றில்

உயிரை இழுத்துப் பிடிக்கும்
உறவின் நம்பிக்கை வேர்கள்
உடைபடும் மாத்திரத்தில்
மனதின் கர்ஜனைகள்
அவ்வளவு எளிதாய்ப் புலப்படுவதில்லை.

சுயமுகம் கண்டதில்
இறுகிப் பிடிக்கும் இதயத் துண்டின்
இரக்கங்களின்னும்
ஒருமுறையேனும் மிரட்டி
விரட்டிவிடக் கூடாதெனும்
பிரார்த்தனைகளை எச்சங்களிட

நிஜமிழந்த
நேசத்தின் கவசம் உடைந்த சேதி
அறிந்து கொள்ளவில்லையென
ஊமை வடிவிலும்
மகிழ்வினை ஒற்றிக் கொள்ளும்
எல்லைக் கோடுகளுமாய்

மெய் வருந்தும் சுயம்
ஓட்டுக்குள்
ஒதுங்கிக் கொள்ளும்
வித்தியாசங்கள்
குற்றப்பத்திரிகை வாசிக்கட்டுமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறென்ன செய்ய

பெரும் போராட்டக்
களைப்பு மனம் முழுவதும்
தீவிரங்களாக
நானும்
அந்தக் கரையோரம்தான்
அமர்ந்திருந்தேன்

சிதறும் குருதித் துளிகள்
பெரும் வெள்ளம் போல வந்து
குளிப்பாட்டிக் கொண்டிருந்தது
காண்போரையெல்லாம்

பதறிப்போய் எழுந்திருந்தவளை
நிமிர்ந்திருக்கக் கூடாதென
கட்டளைகள் பிறப்பிக்கப்பட

குரல் தொடுக்கவும்
பின் கைதூக்கவும்
கூட்டங்களாகவும் முடியாதென
அடக்கப்பட்டிருந்தோம்

காட்சிகள் முன்னர் போலின்றி
காணமுடியாதவைகளாகவும்
திணிக்கப்படுவதாகவும்
சித்திரவதைகள் செய்து கொண்டிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

உடல் நிமிர்த்த திறனற்றவர்கள்தான்
என்றாலும்
தணிக்கும் அறிவிப்பைக் கூட
ஏந்த மனமற்றவர்களாய்
அப்போதும்

ஊமையாய்ச்
செவிடாய்
இயலாதவர்களாய்
பிழைத்தலுக்கான வழி தேடினோம்
வார்த்தைகளைக் கவ்வியபடி

இப்போது சொல்
சிறு முறைப்பையாவது
வெளிவிட முடியாது
வெள்ளைக் காகிதம் போல
தவறவிட்ட

இந்தச் சொல்லை கொண்டு
இனி
வேறென்ன செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலமென்ற பெயருக்குள்

உயிர் இருக்குதென
காட்டிக் கொள்ள முடியாதபடி
காலமென்ற பெயருக்குள்
மறைந்து கிடக்கிறது பெண்மை

அடைந்து கிடக்கும் இடங்களிலும்
பாதுகாப்பென
எங்களால்
ஒழிந்து கொள்ள முடிவதில்லை
சற்றேனும்

கவர்ந்திழுக்க வேண்டுமென
புருவங்கள் தூக்கியபடி
அலைந்து திரியும்
வலை விரிப்பாளனின்
திளைக்க வைக்கும் வார்த்தைகள்

எங்களின்
எல்லைக் கோடுகளை
சதுரம் வட்டமாக்கி
வட்டங்கள் புள்ளியென்றாக
இன்னமும்
இறுகிக் கொள்ளவே செய்திருக்க

நகர முடியாத இறுக்கத்திலும்
முகம் சுருங்க மறுக்கும்
சிறு புன்னகையின் நீளங்கள்
புரட்சிகள் செய்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயிலும் கனவுகளிடம்

காரிருள் போர்வைக்குள்
துயிலும்
கனவுகளைக் கொஞ்சம்
கண் திறக்கச் செய்கிறேன்

கடத்திச் செல்லவும்
வழிப்பறியென
வசதியான உத்திகளால்
வளைத்துப் போடவும்
சளைக்காமல் முயலும்

இன்னும் அதே
இருள்மையின் முன்தான்
இப்போதும்,
அத்தனை சிந்தனையும்
அவிழ்த்தெறிய வேண்டுமென்றே
மனத் துகிலுரிக்கப்பட

எதிர்பார்ப்புக்கள்
அணிவகுக்கும் போதெல்லாம்
வியப்பளிக்கும் அக்கனவுகள்
இன்னமும்
இருள்மை விலகவில்லையென

ஆழ்துயிலில்
அப்பாவியாய் உறங்குதல்
காணும் போதெல்லாம்
அரட்டல் செய்யும்
காவல் வீரனாய் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருபிடி வானோடு

ஒருபிடி வானோடுதான்
இப்போதெல்லாம்
எங்களின் பறத்தல்

நாள்தோறும் வதைக்கப்பட்டு
அவ்வப்போது
அறிமுகம் செய்யப்படும்
புதிய எல்லைகளின் மௌனித்தல்
பெரும்பாரமாய் அழுத்த

அவதூறுக் காற்றினையும்
வஞ்சகப் பேரிடியையும் தாண்டியே
இடையுறாது
இடிந்து விழும்
வானத்தின்
எச்சங்களை சுமந்தவர்களாய்

இனியும்
தோற்றுவிடக்கூடாதெனும்
உயிர்ப்பித்தலின் அடையாளமாய்
கூடவே பயணிக்கின்றது
அந்த வானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

## இதழ் வரையும்

*சலனங்களின்றி*
*ஆனந்தமென*
*ஆயிரம் முறை முகவுரை*
*வரைகின்றன இதழ்கள்*

*முகம் காட்டா*
*மரண முனகல்கள்*
*நமக்குள்ளே*
*செறிந்தே மிகைத்திருக்க*

*உறவின் இணைப்புகள்*
*இன்னமும் கொஞ்சம்*
*இளைப்பாறிச் செல்லவேண்டுமென்ற*
*உயிரூட்டலோடு*

*சங்கடங்களை*
*இருத்திடக் கூடாதெனும்*
*சொல்லடுக்குகலாய்*
*மனதுக்கு வெளியே*
*கருத்தரிக்கின்றது மலர்ந்தபடி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வைப் பொழுதொன்றில்

வதை தரும்
பார்வைப் பொழுதொன்றில்
சுருண்டு விழும் வெறுஞ்சடலமாய்
அவ்வப்போது
உதிர்ந்து விழுகின்றன உணர்வுகள்

பிணக்காடாய்
மனம் எரிதல் கண்டும்
கணக்கெடாமல்
சுவை இன்பப் புகலிடம் தேடும்
கண்விழி தைத்தலென்பது

உடல் நாண
உயிர்கால்களைத் தின்று
செமித்த பூரிப்போடு
சலனங்களின்றியே

செத்தும் பிழைக்கும் அந்த
இறப்போடுதான்
இப்போதும்,

மெலிந்து போன
உணர்வுச் சட்டங்களுக்குள்
வலிந்தே
ஒதுங்கிக் கொள்கிறோம்
தாண்டிச் செல்ல மறுக்கும்
அப்பார்வைகளோடு போராடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

## நேச எதிரிகளே

ஒரு போதும் முடிந்து
விட்டிராத
என் நேச எதிரிகளே!

அடிக்கடி போர் தொடுங்கள்
என் தேசத்தின் மீது
என் முகவரிகள் குழப்பத்தில்
திண்டாட
சுவாசித்தல் கூடாதெனும்

குறுகிய வெறிகளால்
குறிவைத்து தாக்குவதென்றால்
அதையும்
நிறைந்த அன்போடு
வெல்லப் பிறந்தவள்தான்,

இதுவரை உயிர் தின்னும்
இந்த துரோக வீரங்களால் மட்டுமே
சுற்றிலும்
பிண்டங்கள் அடுக்கப்பட்டிருக்க

இனியும்
நசுக்க முடியாதென
மறைவினில் நின்று
கல் வீசாதீர்கள்

சோலைச் சுகந்தங்களை விடவும்
கல்லெறிதல்களையே
அதிகமதிகமாய்
நேசிக்கப் பழகியவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும்
நேசித்த சொந்தங்களால் தரப்படும்
சிலிர்ப்பான குறிப்பேடுகள்
கண்ணெதிரில் நிகழ்த்தப்படுவதாயின்
தயங்காமல் காத்திருப்பேன்

அது
ஆத்திரமாய்
அழுகையாய்
ஆவேசமாய்
வடிவம் எதுவாகினும்
அது குறித்த கவலைகள்
வேண்டாமே!

என் வேண்டுதல்
எப்போதுமே
நேர்த்திகளை சிதைக்கும்
உங்கள்
வீர சாகசங்களின்
திசைகள் மாறாதிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

## தொலை நிலாப்போல

தேய்ந்து தேய்ந்து
தொலை நிலாபோல
தோன்றி மறைவது காண்பாயா?

சுயத்தின் திமிர்
சாதாரணமென மரபுகள் முறித்து
ஓரிடம் வெளிச்சமும்
வேறிடம் இருட்டுமென
நிலைத்திருக்க முடிவதில்லை

தனக்குள்ளே புதைந்து
அங்குல அங்குலமாய்
அளவெடுத்தே நீளும்
அழகு நிலா போலவே
அவளும்

வெறித்த பார்வைகள்
மடிவீழ்த்தக் கூடுமென
வலைவீசி
வரும் போதெல்லாம்
விழிகளுக்குள்ளே கரைந்து,

காலத்தின் தரிப்பில்
தானொரு ஊனமாய்
காய்ந்த இரவொன்றின் இருப்பிலும்
இன்மையிலும் தயங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதியற்றுச் சாகும்
வெண்மதிக்கு நிகரான
பிறத்தலே சிறப்பென
படைப்பின் நேர்த்தியை
சபித்தவளாக

தழுவிக் கொள்ள
தவம் கிடக்கும்
கண்களின் காட்சிகளிருந்து
தயக்கமின்றி மறைகிறாள்
ஒளிமுக முறுவலோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40 B C2P-8477 ... siragugal_5.5X8.5_CC.job Ups-2

## தொலைதூரக் குரல்

என் ஆத்மாவுக்குள்
ஒழிந்து கொண்டிருக்கும்
தொலைதூரக் குரல் அது

தனிமைக்கு
துணையாய் வரும் கனவுகள்
போலத்தான் அக்குரலும்

வெகு தொலைவில்
எனை விட்டு
காற்றின் துகள்களுக்குள்
மௌனித்திருந்தாலும்

சாய்ந்து கொள்ளச் சுவரின்றி
சரிந்து வீழ்ந்த
நேரங்களிலெல்லாம்
மெல்லக் கசிந்து வந்து

அப்பிய சோகங்களை
பதிந்து வைத்திருப்பதில்
அர்த்தங்கள் இல்லையென
இன்பக் குறிப்பொன்றை
ஒட்டியே செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்ப முகிலோடு

*நிழலுக்கான அதிகாரங்கள்*
*பறிபோன நிலையில்*
*தோப்பை விட்டுத் துரத்தப்படுகிறேன்*

*எனினும்*
*அந்த முற்றத்திலேயே*
*எனது இருப்பும் ஆவலும்*
*மொய்த்துக் கொண்டிருக்க*

*நான் எது செய்தேன்...*
*நிழலில்லா*
*வெம்மை வெளிகளில்*
*கால்கள் நட்டிருந்தேனா*

*இல்லை*
*தூரத்திலிருக்கும்*
*தோப்பைப் பார்த்து*
*மனதாறி விட்டேனா*

*இல்லை,*
*என் தோப்பு வடிவிழக்க*
*மரணக் கோடை*
*அனுபவிக்க வேண்டுமென*
*வேறிடம் நோக்கி*
*ஓட்டமெடுத்தேனா*



41 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை
இளைப்பாறிக் கொள்ள முடியாதபடி
துயர மூட்டைகளைப் பரிசளித்தே
முழங்கினேனா

எது செய்தேன்...
வெளி நின்றாலும்
விகாரமெடுக்காமல்
என் சுவடுகளில்
துளிர்க்க வேண்டுமென்றல்லவா
வேண்டி நின்றேன்

இப்போதுமே
உவகைகள் பூத்துக் குலுங்க
தாகம் தீர்க்கும் சிறு தூறலாய்
உங்களை நோக்கியே வளருவேன்
சுமக்க முடியாத
சொற்ப முகிலோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதையே ஆயுதங்களாக்கி

எழுதப்படும் கவிதைகள்
பலவற்றுக்கும்
இப்போதெல்லாம்
சிறகுகள் தறிப்பதுண்டு

அடுத்தவன் வீடு சென்று
அவை
அடுக்களை
மேயக் கூடாதென்றும்

சிதறுண்ட மிச்சங்கள்
பொறுக்கி
எழுத்து மேசையின்
விரிப்பு அதில்
எச்சில் செய்திடக் கூடாதென்றும்

சிறகுகள் படபடக்க
கத்திப் புரண்டு
என்னுலகக் கனவுகளின்
வானத்தாளுடைக்கும்
வாய்ப்புகள் எதிர்பார்க்க
அதுவும் கூடாதென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

கால் உதறலும்
சிறகசைத்தலும் விழி மயக்க
கள்வர்களின் கைகளில்
காட்சிப் பொருளென
அகப்படக் கூடாதென்றும்

இன்னும்
நீண்ட தூரம்
புலனடக்கிப் பறந்த
களைப்பில்
கிடைக்கும் மடியமர்ந்து
கண்ணயர்தல் கூடாதென்றுமே

விசுக்கென
பறக்கின்றதென் றெக்கையை
அறுத்து
முறித்துப் போடாமல்
அதையே ஆயுதங்களாக்கி
எதிரீடுகளோடு பறத்தலாகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்போது சொல்

நீ
முன்பு போல்
இல்லையென்பதே
ஏராள முறைப்பாடுகளாக

இப்போதெல்லாம் மிக இயல்பாய்
இருக்க முடிவதில்லையென்பதே
உண்மைகளாகின்றன

தேவதையாக
இராட்சசியாக
ஏமாளியாக
கோமாளியாக
இல்லை
ஏதோவொன்றாக
யாரோ நிரப்பிக் கொள்ள

முழுவுரு ஆவதற்குள்
உருவகித்த விரலிடுக்குகள்
மீண்டும் மீண்டும்
சுரண்டிப் பார்க்கின்றன
நான் யார் என்பதை மெய் நிறுத்தி

குழைக்கும் உருவங்களால்
கணிசமாய் இறுக்கப்பட்டிருக்கும்
எனக்குள்ளும்
இதே போராட்டமே



43 B C2P-8477_Ruhin Siragugal_5.5X8.5_CC.job Ups-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல முயற்சிகளுக்கு அப்பாலும்
இறந்து பிறக்கும் மனம்
நான் யார்
என்பதை விசாரிப்பதாய்

சில இயல்புகள்
சிறு திரிவுகளென
மௌனக்கெட
இப்போது சொல்
நான் யார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிழைத்த நிமிடங்களில்

வேறுபடுத்த
சிரித்தும் மகிழ்ந்தும்
காலத்தை வகுத்தொதுக்கி
நீண்டதோர் நட்பினை வளர்த்தெடுக்க
எப்பாடு பட்டிருப்பானோ!

கரிசனைகள் செதுக்கி
கண் மொழி நெய்யும்
போதெல்லாம்,

உறிஞ்சிவிடத்தக்க
கனவோ
அர்ப்பணிப்போ
ஆர்ப்பரிப்போ
எனத் தெரியாத வெள்ளந்தியாய்
எத்தனை பஞ்சாயத்தானாளோ

தேளினும் கொடிய
விச ஜந்தவனின்
குரூர வார்த்தை கொட்டிய
அந்நாள்தான்
சுயமறியக் கிடைத்த
பொன் நாளாய்ச்
சிலிர்த்திருக்குமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44 B C2P-8477_ ...inn Siragugal_5.5X8.5_CC.job Ups-2

இன்னமும்
சொற்களேந்திய
நூலொன்றைக் கற்பழிக்கவும்
புனைந்து
கறையாக்கிக் கொள்ளவும்
கனிந்துருகும்

கழிசடைக் கண்களின்
இழிசடைகளுக்குள்
ஏமாறாது தப்பித்தலும்
விடை பெறுதலும்
எல்லோர்க்கும் வாய்க்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றுமொரு

கிழிந்து உருக்குலைந்த
கௌரவக் குப்பைகளாக
நீயும் நானும்

மனம் இருளேறி
தாண்டவங்களாட
மகிழ்வென
நிறம் பூசிக் கொள்கிறோம் நமக்குள்

இனியும்
நச்சரிக்க முடியாது போகும்
அன்பில்லாக் கணங்கள்
நீண்டு முதிர்ந்த உறவை
களவாடிச் சென்றிருக்க

சொந்த முகமும்
ஓரிதயமும் தவறிய
ஈரமில்லா மொழிகளோடு
கடந்து போகிறோம் தவறாது

எதிர்முனையில்
காலத்தோடு ஒட்டாத
மற்றுமொரு உலகு தனக்காய்
வண்ணங்களைப் பிரிக்கும்
ஒளிப் பள்ளங்களாகின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்களின் கவிதைச் செயல்பாட்டில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இலக்கியத்திலும் இந்த மாற்றங்களை அவதானிக்கலாம். ஜனரஞ்சக வாசகர்களும், சீரியசான வாசகர்களும் கலந்துவிட்ட ஒரு இணைய உலகம் உருவானதே இந்த மாற்றங்களுக்குக் காரணம். பெண்களே தமது உடலைக் கொண்டாடுவதற்கும், மூர்க்கமான எதிர்ப்புக்குரலை வெளிப்படுத்துவதற்கும் தனியான பெண்மொழியை அக்கறைகொண்ட எழுத்தியக்கத்திற்கு கவிதையைப் பயன்படுத்திய போக்கிலிருந்து விலகிய புதியமாற்றம் இது. கவிதைகளின் உள்ளிழைகளில் எதிர்பாராத தருணங்களில் இந்த அதிர்வுகள் கிளர்ந்து வெளிப்படுகின்றன. அந்த அதிர்வுகள் பவித்திரமான சொற்களின் இடையே சட்டென்று எழும் புயலைப்போன்று நிகழ்கிறது. தந்திக்கம்பிகளைச் சுண்டிவிட்டால் ஏற்படும் அதிர்வைப் போன்ற, இந்தவகைக் கவிதைச் செயலை முனெடுப்பவர்களின் பட்டியலில் முஜாமலாவையும் தைரியமாக இணைத்துக்கொள்ள முடியும் என்றே நம்புகிறேன்.

அதிரும் தந்திக் கம்பிகளில் தூசிகூட உட்காராது என்றான் பிரமிள். அப்படித்தான் முஜாமலாவின் கவிதைகளின் உள்ளே ஏற்படும் அதிர்வுகள் பிறருடைய கவிதைப் பண்புகளைக் குந்தவிடாது தவிர்க்கிறது. அன்பு, குடும்பம், ஏக்கம், வலி, பெருங்கோபம் என அனைத்தையும் கவிதைக்குள் வைக்கும்போது, சொற்களைச் சுண்டி அதிரச்செய்துவிட்டு நம்மிடம் வாசிப்புக்குத் தருவதைப்போன்ற ஒரு தோற்றத்தை தருகிறது. அதிர்ந்து கொண்டிருக்கும் கவிதைக்குள் உள்ள இந்த மனிதப் பண்புகளில் நமது கருத்துக்களை கொண்டுபோய் உட்கார வைக்க முடியாதிருக்கிறது. அப்படி அதிரச்செய்வதே அவரின் தனித்துவமாகவும் எண்ணுவதற்கு நம்மைத் தூண்டுகின்றன.

**றியாஸ் குரானா**

**விலை ரூ. 160/-**

கடல் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cover design : kmkarthikn